CAREERINDIA

**Lang. Code : 17**

इस पुस्तिका में **20** पृष्ठ हैं ।
This booklet contains **20** pages.

# AAT-20-II

**प्रश्न-पत्र II / PAPER II**
**तमिल भाषा परिशिष्ट**
**Tamil Language Supplement**
**भाग IV & V / PART IV & V**

**परीक्षा पुस्तिका संकेत**
**Test Booklet Code**

**M**

**परीक्षा पुस्तिका संख्या**
**Test Booklet No.**

**इस परीक्षा पुस्तिका को तब तक न खोलें जब तक कहा न जाए ।**
**Do not open this Test Booklet until you are asked to do so.**
**इस परीक्षा पुस्तिका के पिछले आवरण (पृष्ठ 19 व 20) पर दिए निर्देशों को ध्यान से पढ़ें ।**
**Read carefully the Instructions on the Back Cover (Page 19 & 20) of this Test Booklet.**

**तमिल में निर्देशों के लिए इस पुस्तिका का पृष्ठ 2 देखें । / For instructions in Tamil see Page 2 of this Booklet.**

## परीक्षार्थियों के लिए निर्देश

1. यह पुस्तिका मुख्य परीक्षा पुस्तिका की एक परिशिष्ट है, उन परीक्षार्थियों के लिए जो या तो भाग IV (भाषा I) **या** भाग V (भाषा II) **तमिल** भाषा में देना चाहते हैं, लेकिन **दोनों नहीं** ।
2. परीक्षार्थी भाग I एवं भाग II **या** III के उत्तर मुख्य परीक्षा पुस्तिका से दें और भाग IV व V के उत्तर उनके द्वारा चुनी भाषाओं से ।
3. अंग्रेज़ी व हिन्दी भाषा पर प्रश्न मुख्य परीक्षा पुस्तिका में भाग IV व भाग V के अन्तर्गत दिए गए हैं । भाषा परिशिष्टों को आप अलग से माँग सकते हैं ।
4. इस पृष्ठ पर विवरण अंकित करने एवं उत्तर पत्र पर निशान लगाने के लिए **केवल काले/नीले बॉल पॉइंट पेन** का प्रयोग करें ।
5. इस भाषा पुस्तिका का **संकेत** है **M** । यह सुनिश्चित कर लें कि इस भाषा परिशिष्ट पुस्तिका का संकेत, उत्तर पत्र के **पृष्ठ-2** एवं मुख्य परीक्षा पुस्तिका पर छपे संकेत से मिलता है । अगर यह भिन्न हो, तो परीक्षार्थी दूसरी भाषा परिशिष्ट परीक्षा पुस्तिका लेने के लिए निरीक्षक को तुरन्त अवगत कराएँ ।
6. इस परीक्षा पुस्तिका में **दो** भाग IV और V हैं, जिनमें **60** वस्तुनिष्ठ प्रश्न हैं, जो प्रत्येक 1 अंक का है :
   भाग-IV : भाषा-I (तमिल) (प्र. 91 से प्र. 120)
   भाग-V : भाषा-II (तमिल) (प्र. 121 से प्र. 150)
7. भाग-IV में भाषा-I के लिए 30 प्रश्न और भाग-V में भाषा-II के लिए 30 प्रश्न दिए गए हैं । इस परीक्षा पुस्तिका में केवल तमिल भाषा से संबंधित प्रश्न दिए गए हैं । **यदि भाषा-I और/या भाषा-II में आपके द्वारा चुनी गई भाषा(एँ) तमिल के अलावा है तो कृपया उस भाषा वाली परीक्षा पुस्तिका माँग लीजिए । जिन भाषाओं के प्रश्नों के उत्तर आप दे रहे हैं वह आवेदन पत्र में चुनी गई भाषाओं से अवश्य मेल खानी चाहिए ।**
8. **परीक्षार्थी भाग-V (भाषा-II) के लिए, भाषा सूची से ऐसी भाषा चुनें जो उनके द्वारा भाषा I (भाग-IV) में चुनी गई भाषा से भिन्न हो ।**
9. रफ कार्य परीक्षा पुस्तिका में इस प्रयोजन के लिए दी गई खाली जगह पर ही करें ।
10. सभी उत्तर केवल OMR उत्तर पत्र पर ही अंकित करें । अपने उत्तर ध्यानपूर्वक अंकित करें । उत्तर बदलने हेतु श्वेत रंजक का प्रयोग निषिद्ध है ।

## *INSTRUCTIONS FOR CANDIDATES*

1. This booklet is a supplement to the Main Test Booklet for those candidates who wish to answer **EITHER** Part IV (Language I) **OR** Part V (Language II) in **TAMIL** language, but **NOT BOTH**.
2. Candidates are required to answer Part I and Part II **OR** III from the Main Test Booklet and Parts IV and V from the languages chosen by them.
3. Questions on English and Hindi languages for Part IV and Part V have been given in the Main Test Booklet. Language Supplements can be asked for separately.
4. Use **Black/Blue Ball Point Pen only** for writing particulars on this page / marking responses in the Answer Sheet.
5. The CODE for this Language Booklet is **M**. Make sure that the CODE printed on **Side-2** of the Answer Sheet and on your Main Test Booklet is the same as that on this Language Supplement Test Booklet. In case of discrepancy, the candidate should immediately report the matter to the Invigilator for replacement of the Language Supplement Test Booklet.
6. This Test Booklet has **two** Parts, IV and V, consisting of **60** Objective Type Questions, each carrying 1 mark :
   Part-IV : Language I - (Tamil) (Q. 91 to Q. 120)
   Part-V : Language II - (Tamil) (Q. 121 to Q. 150)
7. Part-IV contains 30 questions for Language-I and Part-V contains 30 questions for Language-II. In this Test Booklet, only questions pertaining to Tamil language have been given. **In case the language/s you have opted for as Language-I and/or Language-II is a Language other than Tamil, please ask for a Test Booklet that contains questions on that language. The language being answered must tally with the languages opted for in your Application Form.**
8. **Candidates are required to attempt questions in Part -V (Language-II) in a language other than the one chosen as Language-I (in Part-IV) from the list of languages.**
9. Rough work should be done only in the space provided in the Test Booklet for the same.
10. The answers are to be recorded on the OMR Answer Sheet only. Mark your responses carefully. No whitener is allowed for changing answers.

परीक्षार्थी का नाम (बड़े अक्षरों में) : ____________________
Name of the Candidate (in Capitals) :
अनुक्रमांक : (अंकों में) ____________________
Roll Number : in figures
: (शब्दों में) ____________________
: in words
परीक्षा केन्द्र (बड़े अक्षरों में) : ____________________
Centre of Examination (in Capitals) :
परीक्षार्थी के हस्ताक्षर : ____________ निरीक्षक के हस्ताक्षर : ____________
Candidate's Signature : Invigilator's Signature :
Facsimile signature stamp of
Centre Superintendent ____________________

M

www.careerindia.com

CAREERINDIA



**Lang. Code : 17**

# AAT-20-II

தேர்வு நூற்கட்டு சங்கேதக் குறியீடு

**M**

இந்த நூற்கட்டு **20** பக்கங்கள் கொண்டது

## தாள் II

## தமிழ் மொழி துணை நூற்கட்டு

## பகுதி IV & V

**அவிழ்க்கச் சொல்லப்படும் வரை யாரும் இந்த நூற்கட்டை அவிழ்க்கக் கூடாது. இந்த நூற்கட்டின் பின்பக்க உறைப்பகுதியில் (பக்கம் 19 & 20) காணப்படும் வழிகாட்டுதல் குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும்.**

**தேர்வு எழுதுவோர்க்கான வழிகாட்டும் குறிப்புகள்**

1. இந்நூற்கட்டு முக்கிய தேர்வு நூற்கட்டுக்கான இணைப்பாகும். இது பகுதி IV (மொழி I) **அல்லது** பகுதி V க்கு (மொழி II) **தமிழ்** மொழியில் விடையளிக்க விரும்புவோர்க்கு மட்டுமே உரியது. **இரண்டிற்கும் உரியது அல்ல.**
2. தேர்வு எழுதுவோர் முக்கிய தேர்வு நூற்கட்டின் பகுதி I & பகுதி II **அல்லது** III க்கும் அவர்கள் தேர்ந்தெடுத்த மொழிகளின் பகுதி IV, V ஆகியவற்றிற்கும் விடை அளிக்கவும்.
3. ஆங்கிலம் மற்றும் ஹிந்தி மொழிகளின் பகுதி IV மற்றும் பகுதி V ற்கான வினாக்கள் முக்கிய தேர்வு நூற்கட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. மொழி இணைப்பைத் தனியாக வாங்கிக் கொள்ள வேண்டும்.
4. இப் பக்கத்தில் வினவப்படும் உரிய விவரங்களை/விடைத்தாளில் நீர் மேற்கொள்ளும் பதில் வினையை **நீலம் மை பந்துருள்முனைப் பேனாவினால் மட்டும் நிரப்புக.**
5. இந் நூற்கட்டின் சங்கேதக் குறியீடு **M** ஆகும். இந் நூற்கட்டின் மீதும் இதன் **பக்கம் 2-லும்** அச்சாகி உள்ள சங்கேதக் குறியீடுகள் இரண்டும் ஒன்றே தானா என்பதைச் சரிபார்த்து உறுதி செய்து கொள்க. மேலும் உம் தேர்வு நூற்கட்டு எண்ணும் விடைத்தாள் எண்ணும் ஒன்றேதானா என்பதையும் சரிபார்த்து உறுதி செய்துகொள்க. இவை ஒன்றோடு ஒன்று முரணாக இருக்குமேயானால் தேர்வு எழுதுபவர் இது பற்றி உடனே தேர்வு மேற்பார்வையாளர் கவனத்திற்குக் கொண்டு செல்ல வேண்டும். வேறொரு தேர்வு நூற்கட்டு மற்றும் வேறொரு விடைத்தாள் ஆகிய இரண்டையும் அவற்றிற்குப் பதிலாகக் கேட்டுப் பெற வேண்டும்.
6. இது தேர்வு நூற்கட்டு 2 பகுதிகள் கொண்டது. ஒரே ஒரு மதிப்பெண் நேரிய **60** பல் விடை வினாக்கள் கொண்ட இப்பகுதிகள் முறையே IV & V என்றவாறாக அமையும்.
   பகுதி IV : மொழி - I (தமிழ்) (வினாக்கள் 91 முதல் 120 வரை)
   பகுதி V : மொழி - II (தமிழ்) (வினாக்கள் 121 முதல் 150 வரை)
7. பகுதி IV இல் மொழி I க்கும், பகுதி V இல் மொழி II க்கும் தலா **30** வினாக்கள். இத் தேர்வு நூற்கட்டில் தமிழ் மொழிகளுக்குரிய வினாக்கள் மட்டுமே கொடுக்கப்பட்டுள்ளன.இத்தேர்வு நூற்கட்டில் தமிழ் மொழிக்கான வினாக்கள் மட்டுமே உள்ளன. **தமிழ் மொழி நீங்கப் பிறமொழி எதனையேனும் மொழி I & II க்கு நீர் தெரிவு செய்திருப்பின் அம்மொழிக்குரிய வினாக்கள் கொண்ட தேர்வு நூற்கட்டைக் கேட்டுப் பெறவும். நீர் தேர்வு விண்ணப்பப் படிவத்தில் குறிப்பிட்டுள்ள மொழி தேர்ந்தெடுப்பும், தேர்வு நூற்கட்டில் எழுதியுள்ள விடை மொழியும் ஒன்றாகவே இருக்க வேண்டும்.**
8. **தேர்வு எழுதுவோர், மொழிகள் பட்டியலிலிருந்து தேர்ந்து கொண்ட மொழி I (பகுதி IV இல்) நீங்கலாகப் பிற வேறொரு மொழியை மொழி II (பகுதி V க்கு) தேர்ந்து கொண்டு விடையளிக்க வேண்டும்.**
9. இத் தேர்வு நூற்கட்டில் ஒதுக்கப்பட்டுள்ள முன்வரைவுப் பகுதியில் மட்டும் திருந்தாப் பதிவுகள் இடம் பெற வேண்டும்.
10. ஓ.எம்.ஆர் (OMR) விடைத்தாளில் மட்டுமே விடைகள் பதிவு செய்யப்பட வேண்டும். பதில் வினைகளைக் கவனமாகப் பதிவு செய்க. விடையைத் திருத்தம் செய்து மாற்றி எழுத வெண்ணிற மை ஏதும் பயன்படுத்தக் கூடாது.

தேர்வு எழுதுபவர் பெயர்(தலைப்பு எழுத்துகளில்) ____________________

தேர்வு வரிசை எண் : எண்ணில் ____________________

: எழுத்தில் ____________________

தேர்வு மையம் (தலைப்பு எழுத்துகளில்) ____________________

தேர்வு எழுதுபவர் கையொப்பம் ____________________

தேர்வு மேற்பார்வையாளர் கையொப்பம் ____________________

Facsimile signature stamp of Centre Superintendent ____________________

www.careerindia.com

CAREERINDIA



*தேர்வு எழுதுவோர் தமிழைத் தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே பகுதி - IV [கே.எண்: 91 - 120] க்கான விடைகளைத் தரவேண்டும்.*

Candidates should attempt the questions from **Part - IV [Q. No. 91-120],** if they have opted **TAMIL** as **LANGUAGE - I** only.

www.careerindia.com

## PART – IV
## LANGUAGE – I
## தமிழ்

**பகுதி தேர்வு எழுதுவோர் தமிழைத் (LANGUAGE – I) தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே – IV (கே.எண்: 91-120) க்கான விடைகளைத் தரவேண்டும்.**

**பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்குச் சரியான பதிலைத் தேர்வு செய்க. (கே.எண் 91-99)**

யுகங்கள் கழிந்தன, ஆண்டுகள் கழிந்தன ! மாதங்கள் கழிந்தன. உலகம் துவங்கி எத்தனை ஆண்டுகளிருக்கும்? அத்தனை ஆண்டுகளும் நடைமுறையில் இல்லை; கழிந்து போயின. இறந்த காலங்கள் நிகழ்காலங்களாகத் திரும்பி வரப் போவதில்லை. நிகழ்காலமும் நிற்கப் போவதில்லை. எதிர்காலமும் நிகழ்காலமாகவும் பிறகு இறந்தகாலமாகவும் ஆகக்கூடும். கால சக்கரம் சுழலும்; நில்லாது; இது இயற்கை முறை. இனி, காலத்தோடியைந்த எண்ணங்கள் வாழ்க்கை முறைகள் மாத்திரம் மாறாமல் இருக்குமோ? மாறும். இதுவும் இயற்கை முறை. இவை இரண்டையும் கூட்டிக் காலமும் காலத்தின் அடையாளங்களும் மாறுகின்றன. காலமும் அடையாளங்களும் மாறுகின்றன. புதிய காலமும், அதாவது எதிர் காலமும் அடையாளங்களும், அதாவது எதிர்கால எண்ணமும் வாழ்க்கை முறைகளும் எப்படியிருக்கும்? இயற்கையை அனுசரித்ததாகத்தான் இருக்கும். இயற்கையை அனுசரித்ததாக இருக்கும் என்றால் இன்னபடி என்று விளங்காமல் இருக்கலாம். எதிர்கால எண்ணங்கள், வாழ்க்கை முறைகள், சுயமரியாதை எண்ணம், சுயமரியாதை வாழ்க்கையாகவே இருக்கும். சுயமரியாதை வாழ்வு இயற்கை முறையில் அமைந்தனவா ?

சுயமரியாதைக் கொள்கைகளின் பிரதான அம்ஸம், 'அசல் மனிதரை மத மனிதராக்க வேண்டாம்; அசல் மனிதராகவே இருக்கட்டும்' என்பதும், அசல் கடவுளைக் கோயிற் கடவுளாகவும் மனிதக் கடவுள்களாகவும் ஆக்க வேண்டாம் என்பதும், ஒருவனுடைய சிந்தனை, நடை, வாழ்க்கை முறைகளில் பிறவியிலே ஏற்பட்டிருக்கும் அசல் சுதந்திரத்தை மனிதன் இன்னொரு மனிதனுக்கு வழங்கும் சுதந்திரமாக ஆக்காதே என்பதும் பிறவும் ஆகும்.

**91.** இப்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள காலப் பெயர்கள், கால அளவு குறித்தவை :

(1) நிகழ்காலம், இறந்தகாலம், எதிர்காலம்

(2) இயைந்த காலம், இயற்கைக் காலம், புதிய காலம்

(3) புதிய காலம், அடையாள காலம், மாறும் காலம்

(4) யுகம், ஆண்டு, மாதங்கள்

**92.** இயற்கை முறை இது :____________ சுழலும், நில்லாது ________ மாறும், _______ மாறுகின்றன.

(1) காலச் சக்கரம், வாழ்க்கை முறைகள், அடையாளங்களும்

(2) நிகழ்காலம், எதிர்காலம், அடையாளங்கள்

(3) காலச்சக்கரம், இறந்த காலமாக, இயற்கையின் வழிகளும்

(4) யுகங்கள், ஆண்டுகள், மாதங்கள்

www.careerindia.com

CAREERINDIA



**93.** **காலத்தோடியைந்த பிரித்தெழுதப்படும் போது :**

(1) காலத்தோடு + இயைந்த

(2) காலம் + ஒடு + இயைந்த

(3) காலம் + தோடு + இயைந்த

(4) காலத்து + ஒடு + இழைந்த

**94.** **அடையாளம் என்ற சொல் வேறுவேறு வடிவில் _______ இடங்களில் பயின்று வருகிறது.**

(1) ஏழு

(2) நான்கு

(3) மூன்று

(4) இரண்டு

**95.** **எண்ணம் என்ற சொல் பல்வேறு விகுதிகள் பெற்று __________ இடங்களில் பயின்று வருகிறது.**

(1) ஐந்து

(2) நான்கு

(3) மூன்று

(4) இரண்டு

**96.** **சுதந்திரத்தை ஒரு மனிதர் இன்னொரு மனிதருக்கு வழங்கும் போது பாதிக்கப்படுவது :**

(1) சிந்தனை, நடை

(2) சுயமரியாதை

(3) வாழ்க்கை முறை

(4) எதிர்கால எண்ணம்

**97.** **அசல் கடவுள் தற்போது _______ கடவுளாகவும் ________ கடவுள் களாகவும் ________.**

(1) பல, இரு, உள்ளனர்

(2) மனிதக், இயற்கைக், ஆக்கப்பட்டுள்ளனர்

(3) கோயில், மனிதக், ஆக்கப்பட்டுள்ளனர்

(4) மனிதக், சுயமரியாதைக், மாறியுள்ளனர்

**98.** **சுயமரியாதைக் கொள்கையின் முதன்மையான கூறு :**

(1) மத மனிதரை அசல் மனிதராக ஆக்க வேண்டும்.

(2) மனிதர்கள் இயல்பாக இயற்கையாக இருக்க வேண்டும் அவர்களை மத மனிதராக்க வேண்டாம்.

(3) அசல் மனிதரை மதமனிதராகவும் அசல் மனிதராகவும் மாற்றுவது.

(4) கோயில் கடவுளை மனிதக் கடவுளாக மாற்றுவது.

**99.** **இயற்கையை அனுசரித்ததாக இருக்கப் போகிறவை எவை ?**

(1) காலமும் அடையாளமும்

(2) சுயமரியாதையும் வாழ்க்கை முறைகளும்

(3) எதிர்கால அடையாளம், எண்ணம், வாழ்க்கை முறை

(4) எதிர்கால யுகங்கள், ஆண்டுகள், மாதங்கள்

www.careerindia.com

CAREERINDIA



***பாடலைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்குச் சரியான பதிலைத் தேர்வு செய்க. (கே.எண் 100-105)***

*தன்பெண்டு தன்பிள்ளை சோறு வீடு*
*சம்பாத்யம் இவையுண்டு தானுண்டு என்போன்*
*சின்னதொரு கடுகுபோல் உள்ளங் கொண்டோன்*
*தெருவார்க்கும் பயனற்ற சிறய வீணன் !*
*கன்னலடா என் சிற்றூர் என்போன் உள்ளம்*
*கடுகுக்கு நேர்மூத்த துவரை உள்ளம்*
*தொன்னையுள்ளம் ஒன்றுண்டு தனது நாட்டுச்*
*சுதந்தரத்தால் பிறநாட்டைத் துன்புறுத்தல் !*

*ஆயுதங்கள் பரிகரிப்பார், அமைதி காப்பார்,*
*அவரவர்தம் வீடுநகர் நாடு காக்க*
*வாயடியும் கையடியும் வளரச் செய்வார் !*
*மாம்பிஞ்சு உள்ளத்தின் பயனும் கண்டோம் !*
*தூயஉள்ளம் அன்புள்ளம் பெரிய உள்ளம்*
*தொல்லுலக மக்களெலாம் 'ஒன்றே' என்னும்*
*தாயுள்ளம் தனிலன்றோ இன்பம் ! ஆங்கே*
*சண்டையில்லைதன்னலந்தான் தீர்த்ததாலே.*

**100.** *கடுகு போல் உள்ளம் கொண்ட ஒருவன் மனதில் நிற்பவை :*

(1) *தான், தன்மனைவி, பிள்ளைகள், சோறு, வீடு, வருமானம்*

(2) *தான், தன் சிற்றூர், தனது நாடு*

(3) *தன் நாடு, பிற நாடு, தெரு*

(4) *ஆயுதம், அமைதி, சுதந்திரம்*

**101.** *இப்பாடல் மனித மனதை அளவு மற்றும் ________ வகைப்பிரித்து ________ பெயரிட்டு அழைக்கிறது.*

(1) *பயனால், ஆறு வகை*

(2) *பண்பால், மூன்று வகை*

(3) *பண்பால், ஐந்து வகை*

(4) *கருத்தால், மூன்று வகை*

**102.** *உள்ளத்தை பாடல் இவ்வகையாகக் குறிப்பிடுகிறது :*

(1) *கடுகு, துவரை, மூத்த உள்ளம், தொன்னை*

(2) *கடுகு, துவரை, தொன்னை, மாம்பிஞ்சு, தாயுள்ளம்*

(3) *வீண் உள்ளம், துன்புறுத்தும் உள்ளம், தாயுள்ளம்*

(4) *வீடு நகர், நாடு காக்கும் உள்ளம்*

**103.** *உள்ளம் என்ற சொல் இப்பாடலில் எத்தனை இடங்களில் பதிவாகி உள்ளது ?*

(1) *ஐந்து*

(2) *மூன்று*

(3) *ஒன்பது*

(4) *எட்டு*

www.careerindia.com

CAREERINDIA



**104.** தொல்லுலகம் பிரித்தெழுதப்படுகிறது:

(1) தொல் + லுலகம்
(2) தொல் + உலகம்
(3) தொல்லு + உலகம்
(4) தொன்மை + உலகம்

**105.** தான் உண்டு என்பதுடன் இவை உண்டு எனப் பாடல் குறிப்பவை :

(1) சோறு, வீடு, தாய், தந்தை
(2) மனைவி, மக்கள், உணவு, இல்லம், வருமானம்
(3) பெண்டு, பிள்ளை, தொழில், தெரு
(4) பெண்டு, பிள்ளை, சிற்றூர், நாடு

கீழ்க்கண்ட கேள்விகளுக்குச் சரியான பதிலை தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண் 106-120)

**106.** ஒவ்வொரு மொழியும் அதற்கான இலக்கணத்தைக் கொண்டுள்ளது மற்றும் :

(1) விதிமுறைகளால் கட்டுப்படுத்தப்படுவது
(2) அரசால் கட்டுப்படுத்தப்படுவது
(3) நிறுவனத்தால் கட்டுப்படுத்தப்படுவது
(4) எழுத்து வடிவால் கட்டுப்படுத்தப்படுவது

**107.** மும்மொழிக் கொள்கை நடைமுறையில் மூன்றாவது மொழி __________.

(1) நாடு முழுக்க ஒன்றாக உள்ளது
(2) சமஸ்கிருதம் மட்டும்
(3) ஹிந்தி பேசும் மாநிலங்களுக்கும் ஹிந்திபேசாத மாநிலங்களுக்கும் வேறுவேறாக உள்ளது
(4) ஏதாவது ஒரு வெளிநாட்டு மொழி

**108.** 'பெண் குழந்தைகளைக் காப்போம், பெண் குழந்தைகளுக்கு கல்வியளிப்போம்' என்ற சுவரொட்டி எழுத்தை வகுப்பறையில் ஒட்டுகிறார் ஒரு ஆசிரியர். அதனைக் கவனமாகப் படித்து அதுகுறித்து ஒரு சிறிய பத்தியை எழுதச் சொல்கிறார். இங்குப் பயன்படுத்தப்படும் சுவரொட்டி ஒரு :

(1) நம்பகத் தன்மை கொண்ட பாடப்பொருள்.
(2) இணைப்பு கொண்ட பாடப்பொருள்.
(3) மதிப்புடைய பாடப் பொருள்.
(4) வீணான பாடப்பொருள்.

**109.** மொழியிலகுத் திறன் என்பது __________.

(1) பிழையின்றி எழுதுவது
(2) இலக்கண விதிகளைத் தெளிவாக விளக்குவதும் முறையாகப் பயன்படுத்துவதும்
(3) வாக்கியங்களைச் சரியான உச்சரிப்பில் பேசுவது
(4) ஒருவருடைய எண்ணங்களை தெளிவாகப் பேசுதல், படித்தல், எழுதுதல்

**110.** 'பாட்டம் அப்' என்ற வாசிப்பு முறை இதில் கவனம் செலுத்துகிறது.

(a) ஒலிப்பு
(b) சீர்கள்
(c) வாக்கியம்
(d) சொல்
(e) எழுத்து

(1) a d e b c
(2) a b c d e
(3) a e b d c
(4) b c a e d

www.careerindia.com

CAREERINDIA



**111.** மொழிக் கற்றறிதலில் 'சமூக உறவாடல்' கொள்கை பின்வருவனவற்றில் எதில் நம்பிக்கையாக உள்ளடங்கி உள்ளது ?

(1) புரிந்தறிதல் உள்ளீடுகள் மாணவர்களுக்கு அளிக்கப்பட வேண்டும் அதாவது சற்றுக் கடினமான புரிதல் திறன் தேவைப்படும் உள்ளீடுகள்.

(2) பாடத்திட்டத்தைக் கடந்து மொழி கற்றல் விரிவடையும் போது மொழியைக் கற்கலாம்.

(3) போலச் செய்தல், மீண்டும் மீண்டும் செய்தல் இதற்கான வாய்ப்பு கிடைக்கும் போது மொழிகற்றுக் கொள்ளப்படுகிறது.

(4) மொழி கற்பவர்கள் மற்றவர்களுடன் உரையாடவும் மொழியைப் பகிரவும் வாய்ப்புள்ளவர்களாக இருக்க வேண்டும்.

**112.** முன் அனுமானித்தல் ஒரு துணைத்திறன் என்ற வகையில் இதனுடன் உறவுடையது

(1) முதல்கட்ட எழுத்து

(2) தொகுத்துரைத்தல்

(3) குறிப்பெடுத்தல்

(4) வாசித்தல்

**113.** நல்ல வேலை கிடைக்கும் என்ற எதிர்ப் பார்ப்பில் மாணவர்கள் ஒரு மொழியைக் கற்கும் போது, அந்த வகை மொழி ஊக்கம் :

(1) இன்டிரின்ஸிக்

(2) எக்ஸ்டிரின்ஸிக்

(3) வேலையைமையமிட்டது

(4) ஈகோவை மையமாகக் கொண்டது

**114.** ஒரு நல்ல மொழி வகுப்பில் மாணவர்களுக்கு இதற்கான வாய்ப்பு வழங்கப்படவேண்டியது மிக முக்கியமானது :

(1) மதிப்பீடு செய்தல்

(2) போலச் செய்தல்

(3) தொடர்புறவாடல்

(4) பிழைகளைக் குறைத்தல்

**115.** அனைவரையும் உள்ளடக்கும் ஒரு மொழி வகுப்பில் ஒரு ஆசிரியர் செய்ய வேண்டியது ?

(1) திறமையான மாணவர்களிடம் திறன் குறைந்த மாணவர்களுக்கு உதவி செய்யும் படி கேட்டுக் கொள்வது.

(2) வெவ்வேறு பாணியிலான கற்பித்தல் முறையைப் பயன்படுத்தி மாணவர்களுக்கு துணைசெய்வது.

(3) சிறப்பு பயிற்சியாளர் ஒருவரை நியமித்து மாணவர்களைக் கவனித்துக் கொள்ள வேண்டும் என பள்ளி முதல்வருக்குப் பரிந்துரை செய்வது.

(4) மாணவர்கள் ஆறுமணி நேரத்திற்கு அமைதியாக வகுப்பில் இருக்கும்படி பார்த்துக் கொள்வது.

www.careerindia.com

CAREERINDIA



116. மொழி இலகுத்திறனுக்கு பின் வருவனவற்றில் எந்த கூறு மிக முக்கியமானது ?

(1) துல்லியமான உச்சரிப்புடன் வாசிப்பது.

(2) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் தரப்பட்டுள்ள பாடப் பயிற்சிகளைச் செய்வது.

(3) துல்லியச் தன்மை, சரளத்திறன் இரண்டையும் மேம்படுத்துவது.

(4) குறைந்த செலவாகும் பாடத்துணைப் பொருள்கள் அல்லது செலவாகாத பாடத் துணைப் பொருள்களைப் பயன்படுத்துவது.

117. திறன் நிறைந்த மொழியாசிரியர் செய்வது :

(1) ஆசிரியர் பேசும் நேரத்தைக் கூடுதலாக்குவது.

(2) மாணவர்கள் பேசும் நேரத்தைக் கூடுதலாக்குவது.

(3) மாணவர்களின் பேசும் நேரத்தைக் குறைப்பது.

(4) குழுவான வேலை, இருவர் இணைந்த பயிற்சிகளைக் குறைப்பது.

118. __________ க்கும் __________ கற்றலுக்கும் அச்சுப் பொருள் நிறைந்த சூழல் உள்ளார்ந்த ஒரு பகுதியாக அமைந்துள்ளது.

(1) பள்ளி, வகுப்பறை

(2) வாசிப்பு, தன்னிலை

(3) எழுத்தறிவு, மொழி

(4) தன்னறிவு, தன்னொத்தவர்கள்

119. பன்மொழித்தன்மை ஒரு வளம் என்பதன் பொருள் :

(1) பல மொழிகளைக் கற்றல்.

(2) குழந்தையின் மொழியில் ஒவ்வொரு சொல்லுக்கும் இணையான மற்ற மொழிச் சொல்லைக் கற்பிப்பது.

(3) பாடத்திட்டம், பாடப்பகுதியை கடந்தும் மொழியைக் கற்பிப்பது.

(4) மாணவர்களின் மொழிகளை ஒரு உத்தி முறையாகப் பயன்படுத்துதல்.

120. உங்கள் வகுப்பில் உள்ள அருணன் பார்வைமாற்றுத் திறன் கொண்ட ஒரு மாணவன், ஒரு மொழி ஆசிரியர் என்ற வகையில் நீங்கள் செய்வது :

(1) பயிற்சித் தாள்களை விதவிதமாக தயாரித்து பயிற்சியளிப்பதில் கவனம் செலுத்துவது.

(2) காட்சி வழி எடுத்துரைப்பைக் கற்பித்தலில் பயன்படுத்துவது.

(3) சைகை மற்றும் உடல் மொழியை வித விதமாகப் பயன்படுத்துவது.

(4) பொருள்களைத் தொட்டு உணர வைத்து தெளிவான உச்சரிப்புடன் இடைவெளி விட்டுப் பேசுவது.

www.careerindia.com

CAREERINDIA



தேர்வு எழுதுவோர் **தமிழைத்** தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே **பகுதி - V** [**கே.எண்:** *121 - 150*] க்கான விடைகளைத் தரவேண்டும்.

Candidates should attempt the questions from **Part - V [Q.No. 121-150],** if they have opted **TAMIL** as **LANGUAGE - II** only.

www.careerindia.com

CAREERINDIA



## PART – V
## LANGUAGE – II
## தமிழ்

**பகுதி தேர்வு எழுதுவோர் தமிழைத் (LANGUAGE – II) தேர்ந்தெடுத்திருந்தால் மட்டுமே – V (கே.எண்: 121-150) க்கான விடைகளைத் தரவேண்டும்.**

**பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்குச் சரியான பதிலைத் தேர்வு செய்க. (கே.எண் 121-128)**

பல வளம் வாய்ந்த ஆரிய நாட்டில் அந்தணர் குடும்பமொன்றில் ஏழு சகோதரர்களுக்குப்பின் முத்துப்பட்டன் பிறந்தான். இளமையிலேயே சகல வித்தைகளிலும் வல்லவனானான். அவன் சத்தியத்தில் பற்றுடையவனா யிருந்ததால் அண்ணன் மாரோடு ஒத்துப்போகவும் தாய் தந்தையரோடு வாழவும் முடியவில்லை. ஊரை விட்டு வெளியேறிய முத்துப்பட்டன் கொட்டாரக் கரைக்குச் சென்றான். ராமராஜன் என்ற சிற்றரசனிடம் சேவகத்தில் அமர்ந்தான். சில வருஷங்கள் சென்றன. அவனுடைய சகோதரர்கள் அவனைத் தேடி எங்கெல்லாமோ அலைந்து விட்டுக் கடைசியில் கொட்டாரக் கரை வந்து சேர்ந்தார்கள். அங்கே மரத்தடியில் களைத்துப் போய் உட்கார்ந்திருந்தார்கள். தற்செயலாக அங்கு வந்த முத்துப்பட்டனைக் கண்டார்கள். அவனைக் கண்டதும் அவன் சீராக வாழ்கிறான் என்பதைத் தெரிந்து கொண்டார்கள். அவனை அழைத்துச் செல்ல விரும்பினார்கள். முத்துப்பட்டன் அரசனிடம் விடைபெற்று அண்ணன் மாரோடு புறப்பட்டான். ஆரியன் கோவில், குளத்துப்புளி, சவரிமலை, ஆகிய ஊர்களைக் கடந்து பொதிகை மலை வழியே நடந்தார்கள். சொரிமுத்துப் பாதை வழியாகத் தளவாய்க் கொட்டகைக்கு வந்தார்கள். அங்கே சுமையிறக்கி வைத்துவிட்டு மாலை அனுஷ்டானங்களை முடித்துக் கொண்டார்கள். இரவு கழிந்த பின் மறுபடியும் புறப்பட்டார்கள். சில நாழிகைகளுக்குப் பின் முத்துப்பட்டனுக்குத் தாகமுண்டாயிற்று. அரசடித் துறையில் நீர் குடிக்க இறங்கினான். பூசையில் மூழ்கியிருக்கும் போது அவனுக்குப் பின்னாலிருந்து இனிய நாட்டுப் பாட்டின் ஒலி காற்றில் ஏறி வந்து, அவன் செவி வழியாக உள்ளத்தில் நுழைந்தது.

**121. அண்ணன்மாரோடு அவன் ஒத்துப் போக முடியாததற்கும் ________ வாழ முடியாமல் போனதற்கும் காரணம், அவன் __________.**

(1) ஊரில், வித்தையில் வல்லவனாயிருந்தான்

(2) தாய் தந்தையுடன், சத்தியத்தில் பற்றுடையவனாக இருந்தது

(3) வளமுடன், ஊரைவிட்டு வெளியேறிவிட்டான்

(4) சேவகம் செய்து, கொட்டாரக்கரைக்குச் சென்றது

**122. கொட்டாரக் கரைக்குச் செல்ல ________ ஊரை விட்டு ________, அங்கு அவன் __________ என்ற ________ சேவகத்தில் அமர்ந்தான்.**

(1) இளமையில், பிரிந்தான், சிற்றரசன், ராமராஜனிடம்

(2) சிற்றரசன், விலகினான், முத்துப்பட்டன், ராமராஜனிடம்

(3) முத்துப்பட்டன், வெளியேறினான், ராமராஜன், சிற்றரசனிடம்

(4) முத்துப்பட்டன், வெளியேறினான், சிற்றரசன், ராமராஜனிடம்

www.careerindia.com

CAREERINDIA



123. முத்துப்பட்டன் __________, சகோதரர்கள் __________. முடிவில் கொட்டாரக் கரைக்கே வந்து சேர்தல். நிரப்புக.
(1) வெளியேற்றம், தேடி அலைதல்
(2) சேவகம் செய்தல், களைத்துப் போதல்
(3) சீராக வாழ்தல், தெரிந்து கொள்ளுதல்
(4) தேடி அலைதல், சீராக வாழ்தல்

124. வரிசைப்படியாக பயணத்தை அமைக்க :
(1) தளவாய்க் கொட்டகை, சொரிமுத்துப் பாதை பொதிகை மலை, சவரி மலை, குளத்துப்புளி, ஆரியன் கோவில்.
(2) ஆரியன் கோவில், குளத்துப்புளி, சவரி மலை, பொதிகை மலை, சொரிமுத்துப்பாதை, தளவாய்க் கொட்டகை.
(3) ஆரியன் கோவில், குளத்துப்புளி, சவரி மலை, தளவாய்க் கொட்டகை.
(4) ஆரியன் கோவில், குளத்துப்புளி, சவரி மலை, சொரிமுத்துப்பாதை, பொதிகை மலை, தளவாய்க் கொட்டகை.

125. கரை, கோயில், மலை, துறை இவற்றுடன் இவை இணைந்துள்ளன, இந்தப் பத்தியில் :
(1) சவரி, ஆரியன், அரசடி, பொதிகை
(2) பொதிகை, சவரி, தளவாய், ஆரியன்
(3) கொட்டாரம், ஆரியன், சவரி, பொதிகை
(4) கொட்டாரம், ஆரியன், சவரி, பொதிகை, அரசடி

126. களைப்பு நீங்க உதவியது __________, தாகம் தீர்க்க உதவியது __________, காற்றில் ஏறி வந்தது __________.
(1) அரசடித் துறை, மரத்தடி, சுமை
(2) மரத்தடி, அரசடித் துறை, நாட்டுப் பாடல்
(3) நாட்டுப் பாடல், அரசடித் துறை, மரத்தடி
(4) நாட்டுப் பாடல், மரத்தடி, அரசடித்துறை

127. இங்கு இடம் பெற்றுள்ள ஊர்கள் மட்டும் எத்தனை, ஊர் எனக் குறிப்பிடப்பட்டுள்ள இடங்கள் மட்டும் :
(1) இரண்டு
(2) மூன்று
(3) ஐந்து
(4) எட்டு

128. முத்துப்பட்டன் பிறப்பு பற்றி இப்படிக் கூறலாம் :
(1) நாடு : ஆரியநாடு, குலம் : அந்தணர், குழந்தை : ஏழாவது குழந்தை
(2) நாடு : ஆரியநாடு, குடும்பம் : அந்தணர், குழந்தை : எட்டாவது குழந்தை
(3) நாடு : பலவளம், குலம் : ஆரியம், பிறப்பு : ஏழு சகோதரர்கள்
(4) வித்தையில் வல்லவன், சத்தியத்தில் பற்று கொண்டவன்

www.careerindia.com

CAREERINDIA



**பத்தியைப் படித்து அதனைத் தொடர்ந்து வரும் வினாக்களுக்குச் சரியான பதிலைத் தேர்வு செய்க. (கே.எண் 129-135)**

இக்காலத்தில், 'இல்' என்பது பெரும்பாலும் மக்கள் வாழும் வீட்டைக் குறிப்பதாகும். ஆயினும், அச்சொல் சில பழமையான ஊர்ப் பெயர்களிற் சேர்ந்திருக்கின்றது. திருச்சி நாட்டிலுள்ள ஊர் ஒன்று, அன்பில் என்னும் அழகியப் பெயரைப் பெற்றது. அன்பின் இருப்பிடம் ஆகிய அவ்வூர் இப்பொழுது கீழ் அம்பில் என்று வழங்கும். தேவாரப் பாடல் பெற்ற ஊர்களில் ஒன்று திருப்பாச்சில். அவ்வூர் இப்பொழுது திருவாசி என்னும் பெயரோடு ஸ்ரீரங்கத்தின் அருகே உள்ளது. சில பழம் பெயர்களில் அமைந்த இல் என்னும் சொல், இக்காலத்தில் ஊர் என்று மாறியிருக்கக் காணலாம். ஆதியில் திருச்செந்தில் என வழங்கிய ஊர் இப்பொழுது திருச்செந்தூர் என்று அழைக்கப்படுகின்றது. தேவாரத்திலும் சாசனத்திலும் மைலாப்பில் என்று கூறப்படும் ஊர் பிற்காலத்தில் மைலாப்பூர் ஆயிற்று. இன்னும் இடை மருதில் என்றும், புடை மருதில் என்றும் பெயர் பெற்ற ஊர்கள் இப்பொழுது முறையே திருவிடை மருதூர் ஆகவும், திருப்புடை மருதூர் ஆகவும் விளங்குகின்றன. தொண்டை நாட்டு இருபத்து நான்கு கோட்டங்களில் ஒன்றாகிய மணவிற் கோட்டத்தின் தலைநகர் மணவில் என்பதாகும். அஃது இப்பொழுது மணவூர் என மாறியுள்ளது. இன்னும் இல் என்னும் பெயருடைய சில ஊர்கள், பண்டைப் புலவர்கள் பெயரோடு இணைத்துச் சங்க இலக்கியங்களில் பேசப்படுகின்றன. அரிசில் என்னும் ஊரிற் பிறந்த புலவர் அரிசில் கிழார் என்றும், அஞ்சில் என்னும் ஊரிலே தோன்றியவர் அஞ்சில் ஆந்தையார் என்றும், பொருந்தில் என்ற ஊரைச் சார்ந்தவர் பொருந்தில் இளங்கீரனார் என்றும், கள்ளில் என்ற ஊரிற் பிறந்தவர் கள்ளில் ஆத்திரையரென்றும் பழைய நூல்களிற் குறிக்கப்படுகின்றனர்.

**129. தற்போது ________ என்று மாறிய சொல் பழமையாக ________ என வழங்கியது.**

(1) ஊர், இல்

(2) இல், ஊர்

(3) அம்பில், அன்பில்இல்

(4) அன்பில், அம்பில்

**130. இப்பாடப் பகுதியில் ஊர் என்ற சொல் தனித்தும் விகுதியாகவும், பிற செற்களுடன் இணைந்தும் எத்தனை இடங்களில் இடம் பெற்றுள்ளது.**

(1) பத்து

(2) பதினைந்து

(3) பதினெட்டு

(4) இருபது

CAREERINDIA



131. கிழார் பிறந்த ஊர் _______, அஞ்சிலில் பிறந்த புலவர் ______.

(1) ஆந்தையார், அரிசில்

(2) அரிசில், ஆந்தையார்

(3) பொருந்தில், இளங்கீரனார்

(4) மருதூர், ஆந்தையார்

132. 'அ' எழுத்தில் தொடங்கும் ஊர்ப்பெயர்கள் இங்கு _______ உள்ளன.

(1) ஐந்து

(2) இரண்டு

(3) மூன்று

(4) ஏழு

133. பொருந்தில் ஊரைச் சேர்ந்தவர் ________ ஆத்திரையர் பிறந்த ஊர் ________.

(1) ஆந்தையார், கள்ளில்

(2) இளங்கீரனார், கள்ளில்

(3) கிழார், கள்ளில்

(4) இளங்கீரனார், அரிசில்

134. தேவாரத்தில் கூறப்படும் ஊர் இவை

(1) திருப்பாச்சில், மணவூர்

(2) திருப்பாச்சில், மைலாப்பில்

(3) மைலாப்பூர், மருதூர்

(4) இடைமருதில், புடைமருதில்

135. மக்கள் வாழும் வீட்டைக்குறிக்கும் ________ என்ற சொல் ________ என்பதுடன் இணைந்து ________ எனும் பெயரைப் பெற்றது, அது திருச்சி நாட்டில் உள்ளது.

(1) அன்பு, இல், அம்பில்

(2) இல், அன்பு, அன்பில்

(3) திரு, திருவாசி, திருப்பாச்சில்

(4) ஊர், திரு, செந்தில்

கீழ்க்கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலைத் தேர்ந்தெடுத்து எழுதவும். (கே.எண் 136-150)

136. ஒரு பாட இயலை நடத்தி முடித்த பின் மாணவர்களை அதிலுள்ள பொதுப் பெயரச்சொற்கள், பிரதிப் பெயர்ச் சொற்கள், பண்புப் பெயர்கள் போன்றவற்றைக் கண்டறியச் சொல்கிறார் ஆசிரியர், அவற்றை தரப்பட்டுள்ள கட்டத்தில் எழுதும்படி கேட்டுக் கொள்கிறார். இந்தச் செயல்பாடு இதற்கு எடுத்துக் காட்டாக, அமைகிறது :

(1) இலக்கண விதிகளை மனப்பாடம் செய்தல்.

(2) இலக்கணம் கற்பித்தல்.

(3) இலக்கண மொழிபெயர்பு.

(4) இடப்பின்புலத்தில் இலக்கணம் அறிதல்.

www.careerindia.com

CAREERINDIA



137. மொழித் தொடர்பு கொள்ளக் குழந்தைகள் பயன்படுத்தும் உபநினைவு, இது பின்வருவனவற்றில் எது :

(1) மொழி கற்றல்

(2) மொழி வயப்படுத்தல்

(3) இரண்டாம் மொழி

(4) மொழியியல் திறன்

138. ஒரு ஆசிரியர் என்ற வகையில் மாணவர்களின் வாசிப்பு ஆர்வத்தை மேம்படுத்த என்ன செய்வீர்கள் ?

(1) பாடநூலை மட்டும் வாசிக்கச் சொல்வது.

(2) ஒரு பாடஇயலின் தொகுப்புரையை மனப்பாடம் செய்ய வைப்பது.

(3) வயதுக்குப் பொருத்தமான குழந்தைகள் இலக்கியத்தைப் படிக்க வைத்து ஆர்வத்தை உருவாக்குவது.

(4) குழந்தைகளின் தாய்மொழியில் பாடப் பகுதியை மொழி பெயர்த்துக் கூறி கேள்விகளுக்கான பதில்களைக் கற்கும்படி சொல்வது.

139. மாணவர்களின் மொழிகற்கும் படிநிலையை மதிப்பிட்டு அறிய பின்வரும் முறைகளில் எது உதவியாக இருக்கும் ?

(1) மனப்பாடமாக அறிந்த பாடல் ஒன்றை உடல் மொழியுடன் சொல்லிக் காட்டும்படி குழந்தைகளைக் கேட்பது.

(2) மாணவர்களின் தாய்மொழியில் பாட இயலை மொழி பெயர்த்தல்.

(3) தமது கருத்தைச் சுதந்திரமாக பகிர்ந்து கொள்ளவும் தமது கற்பனையை எடுத்துரைக்கவும் மாணவர்களுக்கு வாய்ப்பு அளித்தல்.

(4) கவிதையில் உள்ள கவிதையியல் கூறுகளைக் கண்டு கூறும்படி குழந்தைகளைக் கேட்பது.

140. ஒரு பாடப் பொருள் பற்றிய அறிவையும் சூழலையும் அடிப்படையாகக் கொண்டு தாம் கேட்ட ஒரு பத்தியின் குறிப்பான அர்த்தத்தைக் கண்டு கொள்கிறார்கள், அந்தப் பத்தியில் அமைந்த வாக்கியங்கள், தொடர்கள், சொற்களையும் புரிந்து கொள்கிறார்கள். கேட்டறியும் தகவலை பொருள்படுத்தும் இந்த முறை __________.

(1) பாட்டம் அப் துணைத்திறன்

(2) டாப் டவுன் துணைத்திறன்

(3) முழு மொழி அணுகுமுறை

(4) ஒருங்கிணைந்த அணுகுமுறை

www.careerindia.com

CAREERINDIA



**141.** *மாணவர்களின் மொழிவளர்ச்சியை மேம்படுத்த பின் வருவனவற்றில் மிகப்பயனுடைய பின்னூட்ட முறை எது ?*

(1) *மாணவர்கள் செய்யும் பிழைகளை உடனுக்குடன் சுட்டிக் காட்டுவது.*

(2) *மொழிப்பயன்பாட்டில் சிக்கல் கொண்ட மாணவர்களுக்கு மட்டும் குறைகளைச் சுட்டிக் காட்டுவது.*

(3) *பிழைகளைப் பகுத்து ஆய்வு செய்து அவற்றை திருத்த ஒரு முறையை அடையாளம் காணவேண்டும், தாய்மொழிக் கலப்பதால் உருவாகும் பிழைகளை விட்டு விடவேண்டும்.*

(4) *மாணவர்கள் தங்கள் பிழைகள் வகுப்பறையில் சுட்டிக் காட்டப்படுவதை விரும்புவதில்லை என்பதால் பிழைகளைக் கண்டு கொள்ளாமல் இருந்து விட வேண்டும்.*

**142.** *பாடநூலைக் கடந்து கற்றல் என்பது _________.*

(1) *பாடநூல் அளவைவிட சற்றுக் கூடுதலாக கற்பிப்பது.*

(2) *பாடநூல் கடந்த துணை ஆதாரங்களை மாணவர்களுக்கு வழங்குதல்.*

(3) *பாடப்பகுதியை முழுமையாகக் கற்பிக்க வேண்டியதில்லை.*

(4) *மாணவர்களின் புரிதல் படிநிலையை விட மேலாக அமையும் பாடநூல் பகுதிகள்.*

**143.** *மொழிப்பாடத்தை நடத்தும்போது ஒரு ஆசிரியர் அறிவியல், சமூக அறிவியல் பாடங்களையும் இணைத்து வாசிக்கச் செய்து அதன் மொழிப்பகுதியை அறிந்து கொள்ளச் செய்கிறார், இந்த வழிமுறை இவ்வாறு குறிக்கப்படுகிறது.*

(1) *இன்டர் டிசிப்பிளனரி*

(2) *பாடப்பகுதி கடந்த மொழி*

(3) *பலவடிவ மொழி கற்பித்தல்*

(4) *துறைசார் மொழி கற்பித்தல்*

**144.** *மாணவர்களின் பேச்சுத் திறனை மேம்படுத்த அவர்களுக்கு தரவேண்டிய பயிற்சி :*

(1) *சிக்கலான, கடினமான பாடப்பகுதியை படிக்க வைத்தல்.*

(2) *ஆசிரியர் படித்துக் காட்ட உச்சரிப்பை கவனித்து கேட்பது.*

(3) *நிஜ வாழ்வுச் சூழலில் கருத்துகளைப் பகிர்ந்து கொள்வது.*

(4) *பேசும் போது பிழைகள் முழுமையாக நீக்கப்படுதல்.*

**145.** *இலக்கணம் கற்பது மாணவர்களிடம் இதனை வளர்க்கிறது.*

(1) *எழுத்தறிவு*

(2) *துல்லியத்தன்மை*

(3) *மொழி இலகுத் தன்மை*

(4) *சொல் வளம்*

www.careerindia.com

CAREERINDIA



**146.** ஒரு மழைநாளில் தம் பெற்றோர்கள் உடன் அமர்ந்திருந்த அனுபவத்தை எடுத்துக் கூறும்படி மாணவர்களிடம் ஒரு மொழி ஆசிரியர் கேட்கிறார். இந்தப் பயிற்சி தரும் விளைவு :

(1) எடுத்துக் கூறும்போது வகுப்பறை இரைச்சல் உடையதாகிறது.

(2) எடுத்துரைக்கும் திறனை வளர்க்கிறது.

(3) வகுப்பறையில் ஒழுங்கின்மையை உருவாக்கும்.

(4) பாடப்புத்தகத்தைப் படித்து உருவான சோர்வை மாற்றும்.

**147.** எழுதுதல் செய்ல்பாட்டின் உருவாக்கத்தில் இவை அமையும் முறை :

(a) சரிபார்த்து திருத்தி எழுதுதல்

(b) விரைந்து சிந்தித்தல்

(c) மறுபார்வைசெய்து சரிபார்த்தல்

(d) முதல் வடிவம் எழுதுதல்

(1) a b c d

(2) b c a d

(3) a d c b

(4) b d c a

**148.** மாணவர் பணிப்பதிவேட்டில் தமது மிகச் சிறந்த ஐந்து செயல்பாடுகளை வைத்துக் கொண்டு மற்றவற்றை நீக்கிவிடும்படி ஒரு மொழி ஆசிரியர் கேட்கிறார். பிறகு ஐந்து தேர்வுகள் பற்றி அவர்களின் கருத்தை விளக்கும்படி கேட்கிறார். இந்தக் கருத்து விளக்கம் இவ்வகையானது :

(1) இணையானவர்களுக்கிடையிலான மதிப்பீடு

(2) தன் மதிப்பீடு

(3) ஆசிரியரின் மதிப்பீடு

(4) தொகுப்பு மதிப்பீடு

**149.** தொடக்க நிலை மொழிக் கல்வியில் பின்வரும் ஆதாரங்களில் எது மிகமிக முக்கியமானது ?

(1) குழந்தைகள் இலக்கியம்

(2) செய்தித்தாள்

(3) கணினி

(4) மாதிரி வடிவம்

**150.** மாணவர்களின் பேச்சுமொழித் திறனை மேம்படுத்துவதில் மிகமிகக் குறைந்த அளவு முக்கியத்தும் உடையது எது ?

(1) ஒரு பொருளை விவரித்தல்.

(2) ஒரு கதையைத் தம் சொந்த சொற்களில் எடுத்துக் கூறுவது.

(3) ஆசிரியர் சொல்வதைப் பின்பற்றிச் சொல்வது.

(4) ஒரு நிகழ்ச்சியை விவரித்துக் கூறுவது.

www.careerindia.com

SPACE FOR ROUGH WORK

www.careerindia.com

CAREERINDIA



**கீழ்வரும் வழிகாட்டுதல் குறிப்புகளைக் கவனமாகப் படிக்கவும்**

1. கேள்விகளுக்கு விடையளிக்கும் முன் தேர்வு நூற்கட்டில் உள்ள விளக்கங்களைக் கவனமாகப் படிக்கவும், விடையளிக்க வேண்டிய வேறுபட்ட முறைகள் அதில் விளக்கப்பட்டுள்ளன.
2. பக்கம் 2-ல் ஓஎம்ஆர் (OMR) விடைத்தாளில் உள்ள ஒவ்வொரு வினாவிற்கும் உரிய நான்கு விடைகளில் மிகச் சரியான ஒரு விடையை மட்டும் நீலம்/கறுப்புமை பந்துமுனைப் பேனாவினால் முழுவதுமாக மைபட்டை தீட்டப்பட வேண்டும்.
3. தேர்வு எழுதுபவர் அவர்தம் விடைத்தாள் மடிந்திருக்கவில்லை என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும். விடைத் தாளில் எவ்விதமான அடித்தல் திருத்தலும் செய்தல் கூடாது. விடைத்தாளில் உரிய இடத்தில் மட்டுமின்றிப் பிற எங்கும் தேர்வு வரிசை எண்ணைக் குறிப்பிடக் கூடாது.
4. எச் சூழ்நிலையிலும் (தேர்வு நூற்கட்டு சங்கேதக் குறியீடு/எண்ணும் தேர்வு விடைத்தாள் குறியீடு/எண்ணும் தம்முள் முரண்படும் நிலையில் மட்டுமன்றி) தேர்வு எழுதுபவருக்கு வேறொரு விடைத்தாள் இணை அளிக்கப்படாது. ஆகவே தேர்வு நூற்கட்டையும் விடைத்தாளையும் தேர்வு எழுதுபவர் மிகவும் கவனமாகக் கையாள வேண்டும்.
5. தேர்வு எழுதுபவர் தேர்வு வருகைத் தாளில் அவருக்கு அளிக்கப்பட்டுள்ள தேர்வு நூற்கட்டு மற்றும் விடைத்தாள் குறியீடு மற்றும் எண்களை சரியாகப் பதிவு செய்ய வேண்டும்.
6. ஓ.எம்.ஆர் விடைத்தாளில் உள்ள தகவல்களை ஒரு இயந்திரம் மதிப்பிட உள்ளது. அதனால் தகவல் எதுவும் விடுபடாமல் இருப்பதும் அனுமதி அட்டையில் தரப்பட்டிருப் பதிலிருந்து மாறுபடாமல் இருப்பதும் அவசியம்
7. தேர்வு எழுத அனுமதி அட்டை தவிர மற்றபடி அச்சு/கையெழுத்துக் குறிப்புகள், துணுக்குகள், பேஜர், செல்போன், மின்சாதனம் எதனையும் தேர்வுக் கூடத்திற்குள் தேர்வு எழுதுவோர் கொண்டு செல்லக் கூடாது.
8. தேர்வு அறைக்குள் அலைபேசி கருவிகள், தொலைத்தொடர்புக் கருவிகள் (செயல் நிறுத்தப்பட்ட நிலையில் கூட) மற்றும் தடை செய்யப்பட்ட பொருள்கள் எதுவும் கொண்டுவரப்படக் கூடாது. இதனைக் கடைபிடிக்காத தேர்வு எழுதுவோர் முறைமீறியவராக கொள்ளப்பட்டு தேர்விலிருந்து தகுதி நீக்கம் செய்யப்படுது உட்பட பிற நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரும்.
9. தேர்வு மேற்பார்வையாளர் வினவும் போது தேர்வு எழுதுபவர் தம் அனுமதி அட்டையைக் காண்பிக்க வேண்டும்.
10. தேர்வுக் இடக் கண்காணிப்பாளர்/தேர்வு மேற்பார்வையாளர் சிறப்பு அனுமதியின்றித் தேர்வு எழுதுபவர் தம் இருக்கையிலிருந்து வெளியேறக் கூடாது.
11. தேர்வு மையத்திற்குள் நுழைதல், தேர்வு மையத்திலிருந்து வெளியேறுதல் ஆகிய இரு வேளையிலும் தேர்வு வருகைப் பதிவுத் தாளில் கையொப்பம் இடாமலும், விடைத்தாளை மேற்பார்வையாளரிடம் திருப்பி அளிக்காமலும் வெளியேறக் கூடாது. வெளியேறுகையில் வருகைப் பதிவுத் தாளில் கையொப்பம் இடாத தேர்வு எழுதுபவரின் விடைத்தாள் திருப்பி அளிக்கப்படாததாகக் கருதப்படும். இந்த முறை மீறிய செயலுக்கு உரிய எதிர்வினை மேற்கொள்ளப்படும்.
12. மின் இயங்கு/மின் இயங்காக் கணிப்பான்களுக்கு அனுமதி இல்லை.
13. தேர்வு ஆணையத்தின் அனைத்துவிதமான நடத்தை விதிமுறைகளுக்கும் தேர்வு எழுதுபவர் கட்டுப்படுவது கட்டாயம். முறை மீறிய செயல்கள் மீது தேர்வாணையத்தின் விதிமுறைகள்படி நடவடிக்கை எடுக்கப்படும்.
14. எச் சூழலிலும் தேர்வு நூற்கட்டும் விடைத்தாளும் தனித்தனியே பிரிக்கப்படக் கூடா.
15. தேர்வு எழுதி முடித்தபின் தேர்வு எழுதுபவர் தம் விடைத்தாளை மேற்பார்வையாரிடம் திருப்பி அளிக்க வேண்டும். தேர்வு எழுதுவோர் இத் தேர்வு நூற்கட்டை உடன் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவர்.

www.careerindia.com

CAREERINDIA



**निम्नलिखित निर्देशों को ध्यान से पढ़ें :**

1. जिस प्रकार से विभिन्न प्रश्नों के उत्तर दिए जाने हैं उसका वर्णन परीक्षा पुस्तिका में किया गया है, जिसे आप प्रश्नों का उत्तर देने से पहले ध्यान से पढ़ लें ।
2. प्रत्येक प्रश्न के लिए दिए गए चार विकल्पों में से सही उत्तर के लिए OMR उत्तर पत्र के **पृष्ठ-2** पर केवल एक वृत्त को ही पूरी तरह **काले/नीले बॉल पॉइन्ट पेन** से भरें । एक बार उत्तर अंकित करने के बाद उसे बदला नहीं जा सकता है ।
3. परीक्षार्थी सुनिश्चित करें कि इस उत्तर पत्र को मोड़ा न जाए एवं उस पर कोई अन्य निशान न लगाएँ । परीक्षार्थी अपना अनुक्रमांक उत्तर-पत्र में निर्धारित स्थान के अतिरिक्त अन्यत्र न लिखें ।
4. परीक्षा पुस्तिका एवं उत्तर पत्र का ध्यानपूर्वक प्रयोग करें, क्योंकि किसी भी परिस्थिति में (केवल परीक्षा पुस्तिका एवं उत्तर पत्र के संकेत या संख्या में भिन्नता की स्थिति को छोड़कर) दूसरी परीक्षा पुस्तिका उपलब्ध नहीं करायी जाएगी ।
5. परीक्षा पुस्तिका / उत्तर पत्र में दिए गए परीक्षा पुस्तिका संकेत व संख्या को परीक्षार्थी सही तरीके से हाज़िरी-पत्र में लिखें ।
6. OMR उत्तर पत्र में कोडित जानकारी को एक मशीन पढ़ेगी । इसलिए कोई भी सूचना अधूरी न छोड़ें और यह प्रवेश-पत्र में दी गई सूचना से भिन्न नहीं होनी चाहिए ।
7. परीक्षार्थी द्वारा परीक्षा हॉल/कक्ष में प्रवेश-पत्र के सिवाय किसी प्रकार की पाठ्य-सामग्री, मुद्रित या हस्तलिखित, कागज़ की पर्चियाँ, पेजर, मोबाइल फोन, इलेक्ट्रॉनिक उपकरण या किसी अन्य प्रकार की सामग्री को ले जाने या उपयोग करने की अनुमति नहीं है ।
8. मोबाइल फोन, बेतार संचार युक्तियाँ (स्वीच ऑफ अवस्था में भी) और अन्य प्रतिबंधित वस्तुएँ परीक्षा हॉल/कक्ष में नहीं लाई जानी चाहिए । इस सूचना का पालन न होने पर इसे परीक्षा में अनुचित साधनों का प्रयोग माना जाएगा और उनके विरुद्ध कार्यवाही की जाएगी, परीक्षा रद्द करने सहित ।
9. पूछे जाने पर प्रत्येक परीक्षार्थी, निरीक्षक को अपना प्रवेश-पत्र दिखाएँ ।
10. केन्द्र अधीक्षक या निरीक्षक की विशेष अनुमति के बिना कोई परीक्षार्थी अपना स्थान न छोड़ें ।
11. कार्यरत निरीक्षक को अपना उत्तर पत्र दिए बिना एवं हाज़िरी-पत्र पर दुबारा हस्ताक्षर किए बिना परीक्षार्थी परीक्षा हॉल/कक्ष नहीं छोड़ेंगे । यदि किसी परीक्षार्थी ने दूसरी बार हाज़िरी-पत्र पर हस्ताक्षर नहीं किए, तो यह माना जाएगा कि उसने उत्तर पत्र नहीं लौटाया है और यह अनुचित साधन का मामला माना जाएगा । **परीक्षार्थी अपने बाएँ हाथ के अंगूठे का निशान हाज़िरी-पत्र में दिए गए स्थान पर अवश्य लगाएँ ।**
12. इलेक्ट्रॉनिक / हस्तचालित परिकलक का उपयोग वर्जित है ।
13. परीक्षा हॉल/कक्ष में आचरण के लिए परीक्षार्थी बोर्ड के सभी नियमों एवं विनियमों द्वारा नियमित हैं । अनुचित साधनों के सभी मामलों का फैसला बोर्ड के नियमों एवं विनियमों के अनुसार होगा ।
14. किसी हालत में परीक्षा पुस्तिका और उत्तर पत्र का कोई भाग अलग न करें ।
15. **परीक्षा सम्पन्न होने पर, परीक्षार्थी हॉल / कक्ष छोड़ने से पूर्व उत्तर पत्र कक्ष-निरीक्षक को अवश्य सौंप दें । परीक्षार्थी अपने साथ इस परीक्षा पुस्तिका को ले जा सकते हैं ।**

**READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY:**

1. The manner in which the different questions are to be answered has been explained in the Test Booklet which you should read carefully before actually answering the questions.
2. Out of the four alternatives for each question, only one circle for the correct answer is to be darkened completely with **Black/Blue Ball Point Pen** on **Side-2** of the OMR Answer Sheet. The answer once marked is not liable to be changed.
3. The candidates should ensure that the Answer Sheet is not folded. Do not make any stray marks on the Answer Sheet. Do not write your Roll No. anywhere else except in the specified space in the Answer Sheet.
4. Handle the Test Booklet and Answer Sheet with care, as under no circumstances (except for discrepancy in Test Booklet Code or Number and Answer Sheet Code or Number), another set will be provided.
5. The candidates will write the correct Test Booklet Code and Number as given in the Test Booklet / Answer Sheet in the Attendance Sheet.
6. A machine will read the coded information in the OMR Answer Sheet. Hence, no information should be left incomplete and it should not be different from the information given in the Admit Card.
7. Candidates are not allowed to carry any textual material, printed or written, bits of papers, pager, mobile phone, electronic device or any other material except the Admit Card inside the examination hall/room.
8. Mobile phones, wireless communication devices (even in switched off mode) and the other banned items should not be brought in the examination halls/rooms. Failing to comply with this instruction, it will be considered as using unfair means in the examination and action will be taken against them including cancellation of examination.
9. Each candidate must show on demand his / her Admit Card to the Invigilator.
10. No candidate, without special permission of the Centre Superintendent or Invigilator, should leave his / her seat.
11. The candidates should not leave the Examination Hall/Room without handing over their Answer Sheet to the Invigilator on duty and sign the Attendance Sheet twice. Cases where a candidate has not signed the Attendance Sheet second time will be deemed not to have handed over the Answer Sheet and dealt with as an unfair means case. **The candidates are also required to put their left hand THUMB impression in the space provided in the Attendance Sheet.**
12. Use of Electronic / Manual Calculator is prohibited.
13. The candidates are governed by all Rules and Regulations of the Board with regard to their conduct in the Examination Hall/Room. All cases of unfair means will be dealt with as per Rules and Regulations of the Board.
14. No part of the Test Booklet and Answer Sheet shall be detached under any circumstances.
15. **On completion of the test, the candidate must hand over the Answer Sheet to the Invigilator in the Hall / Room. *The candidates are allowed to take away this Test Booklet with them.***

www.careerindia.com